பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 205

வெள்ளிக்கிழமை
20 ஜூன் 2025

ஆனி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

கூடைப்பந்தாட்டம்

## வடமாகாண அணித்தெரிவு இன்று, நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 20
தேசிய மட்டப் போட்டிகளுக்கான வடமாகாண கூடைப்பந்தாட்ட அணித் தெரிவுகள் 11

# செம்மணிப் புதைகுழியில் பிரிட்டனின் கண்காணிப்பு

## பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 20

யாழ்ப்பாணம் - அரியாலை செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தை பிரிட்டன் உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்டும். இந்த விடயத்தில் பிரிட்டனினதும், பிரிட்டனின் சர்வதேச சகாக்களினதும் அவதானிப்பு அவசியம் தேவை என்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் தெரிவித்துள்ளார். 09



ஆட்சி அமைத்த தரப்புகள்

## காரைநகர் சபையில் சுயேச்சையின் ஆட்சி

### தவிசாளராக கிருஷ்ணன் கோவிந்தராசன்



யாழ்ப்பாணம், ஜூன் 20
காரைநகர் பிரதேசசபையின் தவிசாளராக சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த கிருஷ்ணன் கோவிந்தராசன் தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 11

## வலி. தெற்கு சபையையும் கைப்பற்றியது தமிழரசு!



யாழ்ப்பாணம், ஜூன் 20
வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தவிசாளராக தியாகராஜா பிரகாஷ் தெரிவுசெய்யப்பட்டார். இதையடுத்து, வலிகாமம் தெற்குப் 11

## வலிகாமம் மேற்கு சபை தமிழரசுக் கட்சியின் வசம்!



யாழ்ப்பாணம், ஜூன் 20
வலிகாமம் மேற்கு பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்துள்ளது. இதன்படி தவிசாளராக சண்முகநாதன் ஜெயந்தன் 11

## செம்மணிப் புதைகுழிக்காக நீதிகோரி இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி இன்று போராட்டமொன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில், செம்மணிப் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித என்புத் 11

## மயங்கிச் சரிந்து பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 20
கோவிலுக்குச் செல்வதற்குத் தயாரான பெண்ணொருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.
காரைநகர் - களபூமியைச் சேர்ந்த, கேதீஸ்வரன் சுசீலா (வயது-50) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
அவர் வலந்தலை மருத்துவமனையில் சேர்க்கப் 09

## தவறுதலான வாக்களிப்பால் கட்சி உறுப்புரிமை பறிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 20
வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் நேற்றைய அமர்வின்போது, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவர் கட்சிமாறி வாக்களித்ததைத் தொடர்ந்து அவரின் கட்சி உறுப்புரிமை பறிக் 11




'ஆட்சியமைப்பு முடிய எங்கட தமிழ்க்கட்சிகளில உட்கட்சிப் பூசல் இன்னும் பத்தியெரியப்போகுது கண்டியளோ'

## வலி. தெற்கு,மேற்கில் தமிழரசின் ஆதிக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20
வலிகாமம் தெற்கு,மேற்கு பிரதேசசபையில் இன்று தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்குக் கூடுதலான சந்தர்ப்பங்கள் உள்ளனவெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 11

## வேலணைப் பிரதேசசபையில் தமிழரசு ஆட்சியமைக்கும்!

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்ப்பாணம் வேலணை பிரதேசசபையில் இன்று தமிழரசுக் கட்சியின் ஆட்சி அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 11

## பரபரப்புக்கு மத்தியில் இன்று ஊர்காவற்றுறை பிரதேசசபை!

### தமிழரசுக்கே அதிக வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20
ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் முதலாவது அமர்வு 'என்னவும் நடக்கலாம்' என்ற பரபரப்புக்கு மத்தியில் இன்று காலை 8.30 மணிக்குக்கூடவுள்ளது.
வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் இந்த அமர்வு நடைபெறவுள்ளது.
13 ஆசனங்களைக் கொண்ட ஊர்காவற்றுறைப் பிரதேசசபையில், தமிழ்த் தேசியப் பேரவை 3 ஆசனங்களையும், தமிழரசுக் 11

## நடுநிலை வகித்தவரை இடைநீக்கியது தவறு!

### இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன் கிளை போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஜூன் 20
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் இராசேந்திரனுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை நியாயமற்றது என்று தந்தை செல்வாவின் பேரனும், காங்கேசன்துறை தொகுதிக் கிளையின் உப தலைவருமான 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 19.06.2025 | 4107 | I | 03 42 47 60 | விசேட எழுத்து I |
| ஹந்தஹரண ராசி சுப பலன் | 19.06.2025 | 1174 | | 06 07 09 59 | வெற்றி இலக்கினம் மேஷம் |
| NLB ஜய | 19.06.2025 | 0133 | D | 5 1 3 5 | |
| மெகா பவர் | 19.06.2025 | 2213 | N | 03 61 68 79 | சுப்பர் இலக்கம் 18 |
| மஹஜன சம்பத | 19.06.2025 | 5865 | O | 7 2 4 6 0 2 | |
| தன நிதானய | 19.06.2025 | 1895 | F | 13 35 44 77 | விசேட எழுத்து F |
| அத சம்பத | 19.06.2025 | 0440 | O | 4 6 0 2 | |

# நீதியமைச்சர் இதுவரை தூக்கத்திலா இருந்தார்?

## புதைகுழி விவகாரத்தில் சாடுகிறார் கயந்த

**கொழும்பு, ஜூன் 20**

**வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் உள்ளன என்பது வதந்தி என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நீதி அமைச்சர் இத்தனை காலமும் தூக்கத்திலா இருந்தார்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக.**

மண்டைதீவு மனிதப் புதைகுழி உட்பட வடக்கில் உள்ள பல மனிதப் புதைகுழிகள் தொடர்பாக வெளியிடப்பட்ட தகவல்கள் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும், சரியான தகவல்கள் இல்லாமல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயார் இல்லை என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே கயந்த கருணாதிலக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போர்க்காலத்திலும் சரி, போர் நிறைவுக்கு வந்த பின்னரும் வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுத் தோண்டப்பட்டன. தற்போது யாழ்ப்பாணத்திலும் ஒரு மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய தோண்டப்படுகின்றது.

போர் நடைபெற்ற காலத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணிப் புதைகுழிதவிர வேறு எந்தப் புதைகுழி தொடர்பிலும் வடக்கு மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இந்தப் பின்னணியில் வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் என்பது வதந்தி என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளமையைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். நீதி அமைச்சர் என்ற பதவி நிலையை மறந்து அவர் பொறுப்பற்ற விதத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யவேண்டும் - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 19.06.2025 | தினம் வியாழக்கிழமை | வெற்றி வாரம் 0573 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கம் 3 5 2 0 7 5 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 17.06.2025 | தினம் வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2839 | ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கம் 15 57 72 79 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 19.06.2025 | தினம் வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கம் 09 11 12 22 | வெற்றி வாரம் 5000 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி 19.06.2025 | தினம் வியாழக்கிழமை | |
| வெற்றி வாரம் 0707 | வெற்றி இலக்கம் 09 41 50 | |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி 19.06.2025 | தினம் வியாழக்கிழமை | | |
| மீனம் | வெற்றி இலக்கம் 18 26 44 45 | சீட்டிழுப்பு வாரம் 4551 | |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 19.06.2025 | தினம் வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து J | சுப்பர் இலக்கம் 18 | வெற்றி இலக்கம் 06 26 34 35 | வெற்றி வாரம் 2015 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 19.06.2025 | தினம் வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கம் 02 14 35 45 | வெற்றி வாரம் 2665 |

# வர்த்தமானி மீளப்பெறலை மன்றில் கூறத் தயங்கும் அரசு

## ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 20

வடக்கு மாகாணத்தில் காணி உரித்தை உறுதிப்படுத்தமுடியாத காணிகளை அரசுடமையாக்கும் வகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி மீளப்பெறப்படும் என பொதுவெளியில் அறிவித்த அரசாங்கம், அதை நீதிமன்றில் கூறுவதற்குத் தயங்குகின்றது என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவையின் அனுமதியையும் பெற்றதன் பின்னரே, நீதிமன்றில் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்படும் என்று அரச தரப்பு சட்டவாதி மன்றுரைத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் 4 மாவட்டங்களில் உள்ள காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அதற்கு எதிராக பல்வேறு கண்டனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படும் எனப் பொதுவெளியில் காணி விவகார அமைச்சு அறிவித்தபோதும் இதுவரையில் அந்த நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ள வழக்கில், அரசாங்கத்தின் சார்பில் மன்றில் முன்னிலையான அரச சட்டவாதியும் அதை நீதிமன்றில் கூறுவதற்கு மறுக்கிறார். அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றதன் பின்னரே அதைக் கூறமுடியும் என்று அவர் தெரிவித்துள்ளார் - என்றார். (எ-இ)

# பாதிப்பில்லாது நடக்கும் எண்ணெய் விநியோகம்

## 'ஒயில்பிரைஸ்' வலைத்தளம் தகவல்

கொழும்பு, ஜூன் 20

ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையிலான மோதல்களால் கச்சா எண்ணெய் விநியோக வலையமைப்பு பாதிக்கப்படவில்லை என்றும் எண்ணெய் மற்றும் எரிவாயு தொடர்ந்து புழக்கத்தில் இருக்கும் என்று "ஒயில்பிரைஸ்" வலைத்தளம் தெரிவித்துள்ளது.

உலகின் பெரும்பாலான எண்ணெய்க் கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணை வழியாகவே பயணிக்கின்றன. அங்கு இதுவரை எந்தத் தடையும் ஏற்படவில்லை என்று அந்த வலைத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. அதேவேளை, எண்ணெய் கிடங்குகள் நேரடியாகத் தாக்கப்பட்டால் ஒரு சிக்கல் எழும் என்றும், மத்திய கிழக்கில் நிலவும் சூழ்நிலையால் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் சற்று அதிகரித்துள்ளன என்றும் அந்த வலைத்தளம் தெரிவித்துள்ளது. (எ-இ)




# இம்மாதத்தில் ஸ்டார்லிங் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 20

எலான் மஸ்க்கின் செயற்கைக்கோள் இணையச் சேவையான ஸ்டார்லிங் விரைவில் இலங்கையில் சேவைகளை வழங்கவுள்ளது.

இந்தமாத இறுதியில் அந்தச் சேவை இலங்கையில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக டிஜிற்றல் பொருளாதாரப் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் நாடு முழுவதும் பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஏற்கனவே நடந்துவருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். ஸ்டார்லிங்கின் வருகை, அதிவேக செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைப்பை வழங்குவதன் மூலம், இலங்கையின் தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் இணைய அணுகல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

# துமிந்தவுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

தங்கமுலாம் பூசப்பட்ட ரி- 56 ரக துப்பாக்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸ்ஸை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள துமிந்த திசாநாயக்கவை நேற்று நீதிமன்றில் முற்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல்–ஈரான் போர் இலங்கையைப் பாதிக்கும்

கொழும்பு, ஜூன் 20

**இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையிலான போர் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்துக்கும் மிகப்பெரிய பாதிப்புகள் ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது - ஈரான் - இஸ்ரேல் மோதலானது இரு நாடுகளினது மக்களை மட்டுமல்லாது, இந்நாட்டிலிருந்து இஸ்ரேலுக்குச் சென்று தொழிலாளர்களாகப் பணிபுரியும் சுமார் 20,000 பேரையும் பாதித்துள்ளது. இவ்வாறு அங்கிருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளன. எனவே, இதற்கானமுறையான திட்டமொன்றுமுன்னெடுக்கப்பட வேண்டும். மேலும், மசகு எண்ணெய் விலைகள் 7 சதவீதம் அதிகரித்துள்ளது. ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை 75 டொலரை நெருங்கிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த 10 வீத டொலர் அதிகரிப்பால் எண்ணெய் விலையில் 400 முதல் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை நாம் மேலதிகமாக செலவிட வேண்டிவரும். வருடந்தோறும் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள எண்ணெயை இறக்குமதிசெய்து வருகிறோம். இது மொத்த இறக்குமதியில் 25 சதவீதமாகும். எரிபொருள் விலை உயர்வு காரணமாக நமது நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்பை முழுமையாக ஆராய்ந்து, பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய தீங்கு விளைவிக்கும் சூழ்நிலையைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (ச-44)

## நாகை கப்பல்சேவை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

காங்கேசன்துறை - நாகப்பட்டினத்துக்கு இடையிலான கப்பல்சேவை நேற்றுமுன்தினம் புதன்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடல் சீற்றம் மற்றும் வானிலை ஆய்வுமையத்தின் எச்சரிக்கையை அடுத்து கடந்த 13ஆம் திகதி முதல் கப்பல்சேவை நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கையைத் திரும்பப் பெற்றதையடுத்து, காங்கேசன்துறைக்கு கப்பல்சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. (ச-இ)



## கெஹலியவின் குடும்பத்தில் மேலும் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 20

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய இரண்டு மகள்களான சாமித்ரி ஜெயனிகா ரம்புக்வெல, அமலி நயனிக்கா ரம்புக்வெல மற்றும் அவரது கணவர் ஆகியோர் பண மோசடி குற்றச்சாட்டில் இலஞ்சம், ஊழல் ஒழிப்பு விசாரணைக் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் ரூபா 134 மில்லியனுக்கும் அதிகமான சொத்துகள் தொடர்பாக இலஞ்சம், ஊழல் ஒழிப்பு விசாரணைக் குழுவில் நேற்று வியாழக்கிழமை விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதே வேளை ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் மற்றொரு மகள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, பிணை நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யத் தவறியதால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இலங்கைத் தூதரகம் ஈரானில் இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 20

ஈரானில் நிலவும் தற்போதைய போர்ச் சூழ்நிலை காரணமாக தெஹ்ரானில் உள்ள இலங்கைத் தூதரகம் தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளது. அதன்படி தூதரகம் தெஹ்ரானிலிலிருந்து ரஷ்ட் நகரில் உள்ள புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அச்சுறுத்தும் டெங்கு 14 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 20

இலங்கையில் இந்த ஆண்டின் இதுவரையில் டெங்குநோயால் 14 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 26 ஆயிரத்து 775 டெங்கு நோயாளிகளும் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. இதேவேளை நாட்டில் 16 மாவட்டங்களில் ஜூன் 30 ஆம் திகதி முதல் ஜூலை 5 ஆம் திகதி வரை டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதன்போது அதிக ஆபத்துள்ள பகுதிகளில் டெங்கு நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களைக் கண்டறிந்து அகற்றி சிவப்பு அறிவிப்புகளை வெளியிட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சந்தமாலி மீது தாக்குதல் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 20

கொழும்பு மாநகரசபையின் பெண் உறுப்பினர் சந்தமாலி உலுவிடகேமீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமையில் கொழும்பு மாநகரசபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதாக வாக்குறுதி அளித்த தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களால் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை நான் கண்டிக்கிறேன். இது மிகவும் கவலைக்கிடமான ஒரு விடயமாகும் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நாமல்ராஜபக்ச தெரிவித்துள்ளார். (ஏ-இ)




## நடுநிலைமையால் கெடுகாலமோ?

மாமியார் உடைச்சால் மண்குடம், மருமகள் உடைச்சால் பொன்குடம் எண்டு சொல்லக் கேள்விப்பட்டிருப்பியள். தாங்கள் என்ன பிழை செய்தாலும் அதைப் பெரிசாவே எடுக்காமல், தங்களுக்குப் பிடிக்காதவை துரும்பளவு பிழை விட்டாலும் அதை ஊதிப்பெருப்பிச்சு, ஊரைக்கூட்டி ஒப்பாரி வைக்கிறது சிலரின்ர குணம். வீட்டுக்கட்சிக்குள்ள இப்ப அதுதான் நடக்குது. கட்சியின்ர மேல்மட்டத்தில 'பதில் பதவியளில' இருக்கிறவை தாங்கள்தான் வீட்டுக் கட்சியையே உருவாக்கினமாதிரி பெரும் விளையாட்டுக் காட்டுகினம் எண்டு அறிவுதெரிஞ்ச நாளில இருந்தே வீட்டுக்கட்சியோட இருக்கிறவை ரத்தக்கண்ணீர் வடிக்கிற அளவுக்கு நிலைமை மோசமாகிக்கொண்டிருக்காம். தாங்கள் சொல்லுற தாளத்துக்கு ஆடாட்டி உடனேயே 'ஒழுக்காற்று நடவடிக்கை', 'இடைநிறுத்தம்' எண்டு கடும்பிடி பிடிக்கினமாம். கட்சி எண்டால் கட்டுக்கோப்பா இருக்கத்தான் வேணும். ஆனால் தங்கட செம்புகள் இதைவிட மோசமான பிழையள் விடேக்க பொத்திக்கொண்டிருந்தவை, எதிரான ஆக்கள் சொல்வழி கேளாட்டி கையில பிரம்போட வெளிக்கிடுறதில என்ன ஞாயம் இருக்கு? அதால கட்சியின்ர மாவட்டக்கிளையள், தொகுதிக்கிளையள், மூலக்கிளையள் எண்டு ஒவ்வொரு கிளையா பதிலாளியளுக்கு எதிரா மாறிக்கொண்டிருக்கிறதா தகவல்.

கிளிநொச்சியில தொடங்கின இந்த எதிர்ப்பு திருகோணமலையிலையும் பரவி அப்பிடியே யாழ்ப்பாணம் தீவகத்துக்கும் வந்து, இப்ப காங்கேசன்துறைத் தொகுதியில மையம்கொண்டு நிக்குதாம். வலி.வடக்குப் பிரதேசசபையில ஆட்சி அமைக்கிறதுக்கு வாக்கெடுப்பு நடத்தேக்க, வீட்டுக்கட்சி உறுப்பினர் ஒருத்தர் நடுநிலைமை வகிச்சவர். அதால அவரைக் கட்சியில இருந்து இடைநிறுத்துறம் எண்டு வீட்டுக்கட்சியின்ர பதிலாளிமார் அறிவிச்சிட்டினம். ஆனால் அந்த உறுப்பினர் செய்ததில ஒரு பிழையும் இல்லையெண்டும், அவரை கட்சியில இருந்து இடைநிறுத்தக்கூடாதெண்டும் காங்கேசன்துறை தொகுதிக்காரர் மேல்மட்டத்துக்கு கடிதம் அனுப்பி இருக்கினம். ஏனெண்டால் நடுநிலைமை வகிச்ச அந்த வயதான உறுப்பினரைத்தான் அந்த சபைக்குத் தவிசாளராப் போடச்சொல்லி கிளைக்குழு தீர்மானம் எடுத்து மேல்மட்டத்துக்குப் எழுத்துமூலம் அறிவிச்சிருந்தது. ஒவ்வொரு வட்டாரத்திலையும், தொகுதியிலையும் ஆருக்குச் செல்வாக்கு இருக்கு, ஆருக்குப் பதவி குடுத்தால் சனம் குழம்பும் எண்டெல்லாம் தொகுதிக்கிளை, மாவட்டக்கிளைக்காரருக்குத்தான் வடிவாத்தெரியும். மேல்மட்டக்காரருக்கு ஒவ்வொரு ஊர்ச்சனத்தின்ர எண்ணம் எப்பிடியெண்டு நாடிபிடிச்சுப் பாக்க ஏலாது. கிளைக்காரர்தான் அதுகளைச் சொல்லவேணும். அதுக்கேத்தபடி, சனத்தின்ர விருப்பப்படி நடந்தால்தான் கட்சி நிண்டுபிடிக்கும்.

ஆனால் வீட்டுக்கட்சிக்காரர் வாய்க்குவாய் 'நாங்கள் தான் ஜனநாயகக்கட்சி' எண்டுகினமே தவிர, அங்க பதிலாளியள் என்ன நினைக்கினமோ அதைதான் கட்சிக்காரர் செய்யவேணும் எண்டளவுக்கு சர்வாதிகாரம்தான் கொடி கட்டிப் பறக்குது. காங்கேசன்துறை தொகுதிக்கிளை தாங்கள் முன்மொழிஞ்ச ஆளை தவிசாளராப் போடச் சொல்லி போட்ட கடிதத்துக்கு ஓம் எண்டோ, இல்லையெண்டோ ஒரு பதிலும் மேல்மட்டக்காரர் சொல்லவேயில்லை. அதாலதான் அந்த உறுப்பினர் நடுநிலைமை வகிச்சவர். அதுக்குப் போய் இடைநிறுத்தம் எண்டு பூச்சாண்டி காட்டியிருக்கினம் பதிலாளியள்மார். இப்ப அவையின்ர முடிவுக்கு எதிரா காங்கேசன்துறை தொகுதிக்கிளையின்ர பதில் தலைவர் போர்க் கொடி தூக்கியிருக்கிறார். (அவரும் பதில் பதவிதான்) தலைவரா இருந்த மாவையர் காலமானதால உபதலைவரா இருந்தவர் தான் இப்ப அந்தக் கிளைக்கு பதில் தலைவர். அந்தப் பதில் தலைவர் ஆர் தெரியுமோ? உந்த வீட்டுக்கட்சியை உருவாக்கின தந்தை செல்வாவின்ர பேரன்தான் அவர். ஒருவேளை இப்ப தந்தை செல்வாவே உயிரோட எழும்பி வந்து, "நீங்கள் செய்யுறதெல்லாம் பிழையெண்டு" சொன்னால் உவையள் அவருக்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எண்டு சொல்லி அவரையும் இடைநிறுத்திப்போடுவினம் கண்டியளோ...

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது. மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு அமையும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியநாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச்செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். உங்கள் பணிகளை நீங்களே முடிப்பது நல்லது.

**மிதுனம்:** வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அலுத்துக்கொள்ளாமல் செய்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் வீண்குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறுசங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**கன்னி:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வெளியூர்ப்பயணம் தவிர்க்கவும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் சக ஊழியர்களின் உதவி கிடைப்பதால் உற்சாகமாகமுடிப்பீர்கள்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இளைய சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். முக்கியமுடிவுஎடுப்பதற்குஉகந்தநாள். புதியமுயற்சி சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும், அவர்களால் ஆதாயமும் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது மட்டும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். பிள்ளைகள்வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**மகரம்:** இறைவழிபாட்டுடன் நாளைத் தொடங்குவீர்கள். உங்கள் உற்சாகம் மற்றவர்களையும் தொற்றிக்கொள்ளும். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் சக பணியாளர்களின் பணிகளில் உதவிசெய்வீர்கள்.

**மீனம்:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் உதவி கேட்டு வருவார். அலுவலகத்தில் உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்வது நல்லது.

# மடுமாதா ஆலயத் திருவிழா சகல ஏற்பாடுகளும் நிறைவு

### 400 பொலிஸார் கடமையில் மன்னார் மாவட்டச் செயலர் தகவல்

**மன்னார், ஜூன் 20**

**மன்னார் மருதமடுத் திருப்பதியின் ஆடி மாதத் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளநிலையில் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

மன்னார் மருதமடு திருப்பதியின் ஆடி மாத திருவிழாவையொட்டி முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசரத்தினம் அடிகளார், மடுத் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், இராணுவம், பொலிஸ், கடற்படை உயர் அதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர்.

இதில் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. இதன்போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் வருகைதர உள்ள நிலையில் மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு 400 பொலிஸாரை பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மருதமடுத் திருப்பதி யின் ஆடி மாதத் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 2ஆம் திகதி திருவிழாத் திருப்பலியுடன் நிறைவடையவுள்ளது.

(ச-56,60)



தென்மராட்சி நாவற்குழி கிழக்கு காதவாய்க்கால் தெருவருகு பிள்ளையார் தேவஸ்தான பரிவார தட்சிணாமூர்த்தி சண்டேஸ்வரர் சன்னிதான பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. (ச-41-159)



# 13வருட நிறைவுதினமும் கௌரவிக்கும் நிகழ்வும்

**கிளிநொச்சி, ஜூன் 20**

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் கரோலஸ் நிறுவனம் மனிதாபிமான கண்ணிவெடியகற்றல் பணியை ஆரம்பித்து 13 வருடங்கள் நிறைவுதினமும் கரோலஸ் நிறுவனத்தில் 20 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் கரோலஸ் முகமாலை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றன.

நிகழ்வில் கரோலஸ் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் பீட்டர் ஹக்ஸ்காட் பேக்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ். முரளிதரன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.சிறீமோகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-41-113)



# சேவைநலன் பாராட்டு விழா

**யாழ்ப்பாணம், ஜூன் 20**

வரணி கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் நா.கண்ணதாசனுக்கு சேவைநலன் பாராட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் ஆசிரியர் திருமதி வ.சகுந்தலா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கோட்டக்கல்விப் பணிப்பாளர் ப.பரணீதரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் நீ.திருவாசகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# காகித அறிக்கைகளால் ஏது பயன்?

காகித அறிக்கைகளாலும், வெற்றுக்கண்டனங்களாலும் எதுவும் நிகழ்ந்துவிடப்போவதில்லை என்பதன் சாட்சியமாக நிற்கின்றது இலங்கை. இதுவரை இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள்,மனிதகுலத்துக்கு எதிரான படுகொலைகள், சிறுபான்மை இனங்கள் மீதான ஒடுக்குதல்கள் என்பன குறித்தெல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஜெனிவாவில் நடக்கும் அமர்வுகளின்போது எத்தனையோ தீர்மானங்களைக் கொண்டுவந்தபோதும், அழுத்தங்களைக்கொடுத்தபோதும், நிபந்தனைகளை விதித்தபோதும் 'கல்லுளி மங்கனைப் போல' இலங்கை எவ்வித பிரதிபலிப்பையும் காட்டாமல், தான் நினைத்ததைமட்டுமே இதுவரை செய்துகொண்டிருக்கிறது. இதனால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தன்னுடைய கையாலாகத்தனத்தை எண்ணி வெட்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அந்த அமைப்பு அப்படி வெட்கித் தலைகுனியவில்லை. இருப்பினும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவந்த இணையனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பில் பெரும் அதிருப்தி அடைந்துள்ளன. அதன் விளைவாகவே 'மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் ஆகிய விடயங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இலங்கை மிகச் சிறிய முன்னேற்றத்தையே வெளிப்படுத்தியிருக்கின்றது' என்று தங்கள் கடுப்பை அந்த இணையனுசரணை நாடுகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப்போர் சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட போது, ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொடூரமான முறையில் கொன்றொழிக்கப்பட்டனர். இலங்கை ஒப்புக்கொள்ள மறுத்தாலும் இறுதிப்போரின்போது 40 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர் என்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இறுதிப்போரின்போது போர்க்குற்றங்களும், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களும் இலங்கை இராணுவத்தால் நிகழ்த்தப்பட்டிருந்தன என்ற குற்றச்சாட்டும் வலுவாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2012ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களிலும், இலங்கையின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திலும் இறுதிப்போரில் நடந்த குற்றங்களுக்கும், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கும் பொறுப்புக்கூறுவதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் நீதியான விசாரணைகளுக்கு வலியுறுத்தப்பட்டாலும், இலங்கை சாக்குப் போக்குகள்கூறி அவற்றைத் தட்டிக்கழித்தே வருகின்றது. இதுவரை இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 5 வரையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளபோதும், இலங்கை அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் கிஞ்சித்தேனும் அக்கறை காட்டவில்லை. மாறாக தீர்மானங்களில் உள்ளவற்றை நிறைவேற்றுவது போன்று பாசாங்கு காட்டி, தகிடுதத்தங்களைச் செய்து சர்வதேச நாடுகளையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையும் ஏமாற்றுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளது. தீர்மானங்களில் உள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு பின்னடிக்கும்போது அந்தத் தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கும் நாடுகளும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் இலங்கைக்குப் போதுமான அழுத்தங்களைக் கடந்தகாலங்களில் வழங்கவில்லை என்பது தமிழ்மக்களின் பக்கமுள்ள மிகப்பெரிய குற்றச்சாட்டு. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நடக்கும்போது கையிலெடுக்கப்படும் இலங்கை விவகாரம் அதன்பின்னர் பேசாப்பொருளாகி விடுகின்றது. இலங்கைக்கு அழுத்தங்களை வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதுகூட சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தங்களை வழங்கி பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிப்பொறிமுறையைத் தோற்றுவிக்கவும் தவறியிருந்தன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை வெளியாகவுள்ள நிலையில், இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு இணை யனுசரணை வழங்கிய நாடுகள் தங்கள் ஏமாற்றத்தை வெளியிட்டிருக்கின்றன. அவ்வாறாயின் இலங்கையின் இந்த மெத்தனப் போக்கை வழிக்குக் கொண்டுவருவதற்கு அந்த நாடுகள் என்ன செய்யப்போகின்றன? என்பது இப்போது முன்னுள்ள கேள்வி. பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்ப்பது அறிக்கைகளை அல்ல, இலங்கையைப் பொறுப்புக்கூறலை நோக்கித் தள்ளும் காத்திரமான செயற்பாடுகளையே. சர்வதேசநாடுகள், இணை அனுசரணை வழங்கிய நாடுகள் இனியாவது அவற்றைச் செய்யுமா?

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

நாம் அறிந்திருப்பதையும்
அறிந்துகொள்ளாமல் இருப்பதையும்
அறிந்துகொள்வதே உண்மையான அறிவு.

– டால்ஸ்டாய்–




## பகிடிவதையைத் தடுக்கத்திட்டம்; வலியுறுத்தி உயர்நீதிமன்றில் மனு




கொழும்பு, ஜூன் 20

**பல்கலைக்கழகங்கள், அரச கல்வி நிறுவனங்களில் நடைபெறும் பகிடிவதை சம்பவங்களைத் தடுக்கத் திட்டமொன்றை வகுக்கவேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிடக்கோரி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.**

இந்த மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 18ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்தது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ராஜீவ் அமரசூரிய மற்றும் அதன் செயலாளர் சரித் கல்ஹேனா ஆகியோர் இந்தமனுவை தாக்கல் செய்துள்ளனர்.

மனுவில் சப்ரகமுவ பல்கலைக்கழகம் அதன் உபவேந்தர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் உயர் கல்வி அமைச்சகத்தின் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ்மா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்கள பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் உட்பட 69 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். (எ-இ)

## ஸ்ரீலங்கா நாடாளுமன்றில் மோகன்லால்

கொழும்பு, ஜூன் 20

இந்திய நடிகர் மோகன்லால், இயக்குநர் மகேஷ்நாராயணனின் புதிய படத்தின் இரண்டாம் கட்டப் படப்பிடிப்புக்காக இலங்கை வருகை தந்துள்ளநிலையில் நேற்று இலங்கை நாடாளு மன்றத்துக்கு விஜயம் செய்துள் ளார். நாடாளுமன்ற அமர்வு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது பிரதி சபாநாயகர் மோகன்லாலை வரவேற்றார். மோகன்லால் பொது மக்கள் பார்வையாளர் மாடத்தில் அமர்ந்து நாடாளுமன்ற நிகழ்வுகளைப் பார்வையிட்டார். (ச-இ)



## இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 20

இஸ்ரேலிய விமான நிலையம் மூடப்பட்டுள்ளதால் இஸ்ரேலில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை எகிப்தினூடாக அனுப்பிவைப்பதற்கு இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதேவேளை வீடுகளில் பணிபுரிபவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் இஸ்ரேலிலுள்ள இலங்கைத்தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச-41-6)

## குற்றப் பிரதேசங்களாக 52 இடங்கள் இனங்காணல்

தென்மாகாணத்திலும் மேல் மாகாணத்திலும் 52 இடங்கள் குற்றச்செயல்கள் கூடிய பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசங்களிலேயே கூடுதலான துப்பாக்கிச்சூடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், விசேட பொறிமுறையில் தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-41-6)

## பணிப்பகிஷ்கரிப்பில் ரயில் கட்டுப்பாட்டாளர்கள்

கொழும்பு.ஜூன் 20

பதவி உயர்வில் தாமதம் உட்பட பலபிரச்சினைகளை முன்வைத்து, நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு முதல் 48 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பில் புகையிரதக் கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் ஈடுபட்டுள்ளது.

இன்று புகையிரத அதிகாரிகளுடன் அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடிய பின்னர், அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் எனப் புகையிரத கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் பொதுச் செயலாளர் கே.டி.டி. பிரசாத் தெரிவித்துள்ளார்.

புகையிரத் திணைக்களத்தில் சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவது உட்பட பல கோரிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

நாளை
சனிக்கிழமை- ஆனி 07
21.06.2025
சுபநேரம் : 02.54- 04.24
ராகுகாலம் : 08.54-10.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் மாற்றத்தில் மாற்றமில்லை!

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் பிரிட்டன் தூதுவரிடம் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஜூன் 20**

**இந்த அரசாங்கம் மாற்றம் என்று சொன்னாலும் ஒருவித மாற்றமும் நிகழவில்லை. எமது உறவுகளுக்கான நீதி இன்னமும் மறுக்கப்பட்டேவருகின்றது. நீதிக்கான எமது போராட்டமும் தொடர்கின்றது என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் பிரிட்டன் தூதுவரிடம் சுட்டிக்காட்டிக் காட்டியுள்ளது.**

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக் யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள நிலையில் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது பிரிட்டன் தூதுவர் வடக்கு இளைஞர்களின் முன்னேற்றங்கள் குறித்தும், அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது நாங்கள் இன்று எங்கள் பிள்ளைகள், கணவர், உறவுகளைத் தேடி நிற்கின்றோம். சர்வதேசமும், அனைத்துலக நாடுகளும் எங்கள் போராட்டத்துக்கு தோள்கொடுத்து, எங்கள் உறவுகளுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுத்தரவேண்டும்.

எங்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 11 வருடங்களாகின்றன. ஆனால் இதுவரை இதற்கான தீர்வு கிடைக்கவில்லை. இந்த அரசாங்கமும் மாற்றம் என்று சொன்னாலும் ஒரு மாற்றமும் நிகழவில்லை என்றும் பிரிட்டன் தூதுவரிடம் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் மனிதப் புதைகுழிகள் தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் அமர்வின் 59ஆவது 60ஆவது கூட்டத்தொடர்களில் ஐக்கிய நாடுகள் சபை முன்வைக்கவேண்டிய பிரேரணை குறித்த மனுவொன்றும் பிரிட்டன் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. (ச-125)

## மாநகரசபை முத்திரையின்றி மக்களிடம் கட்டணம் அறவீடு

### முறைகேட்டுக்கு எதிராக வவுனியா மாநகரசபை நடவடிக்கை

**வவுனியா, ஜூன் 20**

வவுனியா மாநகரசபைக்குட்பட்ட பொதுமலசலகூடம் மற்றும் வாகனத்தரிப்பிடம் ஆகியவற்றின் கட்டணப் பற்றுச்சீட்டில் இடம்பெற்ற முறைகேட்டை வவுனியா மாநகரசபை துணை முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ப.கார்த்தீபன் நேரில் சென்று ஆராய்ந்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொதுமலசலகூடம் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பன மாநகரசபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. அங்கு விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டுக்குப் பின்பகுதியில் மாநகரசபையின் முத்திரை பதிக்கப்பட்டு அவை மாநகரசபையின் வருமானக் கணக்குக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனினும் மாநகரசபைக்குட்பட்ட சில பொதுமலசலகூடங்கள் மற்றும் வாகனத்தரிப்பிடம் ஆகியவற்றில் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டின் பின்பகுதியில் எவ்வித இறப்பர் முத்திரையும் காணப்படவில்லை. இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து மாநகர துணைமுதவர் திடீர் விஜயம் மேற்கொண்டு பற்றுச்சீட்டுகளை விநியோகித்த ஒப்பந்தகாரர்களுக்கு எச்சரிக்கை விடுத்ததுடன் அதனை மீறின் ஒப்பந்தத்தை இரத்துச்செய்து பிறிதொருவருக்கு வழங்குமாறும் கட்டளையிட்டார். (ச-18)

## மாவா பாக்குடன் இளைஞர் கைது

**யாழ்ப்பாணம், ஜூன் 20**

100 கிராம் மாவா பாக்குடன் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். மாவா பாக்கினை உடைமையில் வைத்திருப்பதாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைவாக இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-125,20)

## கணினிக் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

**யாழ்ப்பாணம், ஜூன் 20**

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் குறுகியகால கணினிப் பயிற்சி நெறிக்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 16 வயதுக்கு மேற்பட்டவராகவும் க.பொ.த. சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும். விண்ணப்பங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்து நிலையத்தில் பெற்று நாளை சனிக்கிழமை முன்னதாக விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-இ)



## கரைச்சிப் பிரதேசசபையினர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

**யாழ்ப்பாணம்,ஜூன் 20**

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனைக் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் பிரதேசசபையின் உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் நேற்று வியாழக்கிழமை யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சம்பிரதாயபூர்வமாக சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச்சந்திப்பின்போது கரைச்சிப்பிரதேசசபையின் ஆளணிகளின் தேவைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடன் கலந்துரையாடியதுடன் அதுதொடர்பான மனுவையும் கையளித்தனர். (ச-66)

## திஸ்ஸ விகாரை, செம்மணிப் புதைகுழி கேட்டறிந்துகொண்ட பிரிட்டன் தூதுவர்

**யாழ்ப்பாணம்,ஜூன் 20**

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி, தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம் மற்றும் செம்மணிப் புதைகுழி அகழ்வு என்பன தொடர்பான கள நிலைமைகளைப் பிரிட்டன் தூதுவர் அன்ரூ பட்ரிக்ஸ், வடக்கு ஆளுநர் வேதநாயகத்திடம் கேட்டறிந்துகொண்டார்.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர், ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான உள்ளூர் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் கட்டுநாயக்காவுக்கும் பலாலிக்கும் இடையிலான விமான சேவை ஆரம்பிப்பது பெருமளவு சுற்றுலாப் பயணிகளுக்கு உதவக்கூடியதாக இருக்கும். இது குறித்து அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது இந்தியாவிலிருந்து நாடு திரும்ப எதிர்பார்த்துள்ள அகதிகளுக்கான வாழ்வாதாரத்துக்கு உதவிகள் தேவை என்ற கோரிக்கையையும் ஆளுநர் முன்வைத்தார்.

இதன்போது காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி, தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம் மற்றும் செம்மணிப் புதைகுழி அகழ்வு என்பன தொடர்பாகவும் பிரிட்டன் தூதுவர் களநிலைமைகளைக் கேட்டறிந்துகொண்டார். (ச)



## மரக்கடத்தல் முறியடிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 20**

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு மயில்வானபுரம் அரச காட்டுப்பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மரக்குற்றிகளைக் கடத்திய ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.


தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக விசுவமடுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வீதிச் சோதனை நடவடிக்கை இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது.

சந்தேகநபரிடமிருந்து மரக்குற்றிகளைக் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட கப்ரக வாகனம் மற்றும் 12 நாவல்மரக்குற்றிகள் என்பன கைப்பற்றப்பட்டன. சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
15 . 02 . 1948



மறைவு
18 . 06 . 2025

## அமரர் சண்முகராசா உலகநாதன்
(சுந்தரலிங்கம்)

வேலனை மேற்கைப் பிறப்பிடமாகவும், மண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா உலகநாதன் அவர்கள்

காற்றோடு கலந்த சுவாசம்.............
கண்ணிராய் வடிந்த பாசம்............
உலகினை கடந்து போனாலும்........
உறவுகளை கடந்து போனாலும்.......
ஓர் நல்ல மனிதனை..................
உங்களோடு...............
பயணித்தவர்கள் மறந்து போவார்களா.....

குடும்பத்தினர்.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமையை நிறுத்த சட்டம்



கொழும்பு, ஜூன் 20
முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட சிறப்புரிமை கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய ஓய்வூதியம் என்பவற்றை இரத்துச்செய்வதற்கு அரசாங்கம் நட வடிக்கை எடுக்க வுள்ளது. அதற்கான சட்டத்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கருத்து வெளியிட்ட அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதிகளுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள விசேட சிறப்புரிமைளை இரத்துச்செய்வதற்காகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 வருடங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்துச்செய்வதற்கும் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள விசேட சிறப்புரிமைளை இரத்துச்செய்வதற்காகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்துச்செய்வதற்கும் சட்டவரைவுகளைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது- என்றார். (எ-44)

# ஆணவம் பிடித்து ஆடும் சபாநாயகர்

### அஜித் பெரேரா எம்.பி. காட்டம்

கொழும்பு, ஜூன் 20
எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளை மறுத்து சபாநாயகர் ஆணவம் பிடித்து ஆடுகின்றார். அவருக்கு எதிராக சர்வதேச நாடாளுமன்றத்தில் முறைப்பாடுசெய்யவுள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இருந்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சபாநாயகருக்கு நாடாளுமன்ற சம்பிரதாயம் எதுவும் தெரியாது. அவர் புதியவர், இருந்தாலும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் கற்பதற்கும் அவர் தயாரில்லை.

எதிர்க்கட்சித் தலைவர், பிரதம கொறடா, அவைத் தலைவர் எல்லோரும் எழுந்து பேசுவதற்கு சபையில் முன்னுரிமை உண்டு. அவர்கள் தேவையேற்படின் எழுந்து பேசுவார்கள். ஆனால் சபாநாயகர் எதிர்க்கட்சித்தலைவரின் சிறப்புரிமையை மறுத்து, எதிர்க்கட்சியின் கொறடாவையும் மறுத்து ஆணவம் பிடித்து ஆடுகிறார். அதனால் நாம் சபைக்குள் எமது எதிர்ப்பை வெளியிட்டோம். சபை நடவடிக்கைகளைப் புறக்கணித்து வெளியேறினோம். இதற்கு முன்பும் எமக்கு இப்படி அநீதி இழைக்கப்பட்டது. சபாநாயகர் பாடசாலை மாணவர்களை நடத்துவதுபோல் எம்மை நடத்துவதற்கு முயன்றால் அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம் - என்றார். (எ-44)

# மரண அறிவித்தல்

பிறப்பு
01 . 02 . 1944



இறப்பு
18 . 06 . 2025

## தெய்வநாயகி மகேந்திரராசா

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், 201, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வநாயகி மகேந்திரராசா அவர்கள் கடந்த (18.06.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மகேந்திரராசா (கணக்காளர்-ஓட்டோஸ் கம்பனி, யாழ்ப்பாணம், முன்னாள் முகாமையாளர் இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்-யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (சில்க் ப்ரடைஸ்)-செல்லம்மா தம்பதியின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-மகேஸ்வரியம்மா (சித்தங்கேணி) தம்பதியின் பாசமிகு மருமகளும் சயந்தறூபன் (ஆசிரியர்-யா/ வேலணை மத்திய கல்லூரி), ஹேமறூபன் (பிரதம அஞ்சல் அலுவலகம்-யாழ்ப்பாணம்), பிரணவறூபன் (கணக்காளர்-சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கஜலக்ஷ்மி (பிரதி அதிபர், யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ஷாமிலா (உதவிக்கணக்காளர்-கொழும்பு பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிதியா, அன்ஜனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், புனிதவதி, நடராஜா மற்றும் சிவஞானமூர்த்தி, நாகரத்தினம், சந்திரா (சீதா), குகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 6479
077 379 5703
077 521 3247

இல 201, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 05 . 1952



மறைவு
19 . 06 . 2025

## யோகேஸ்வரன் இரத்தினேஸ்வரி
(ஓய்வுநிலை ஆயுர்வேத வைத்திய அதிகாரி)

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் இரத்தினேஸ்வரி (ஓய்வுநிலை ஆயுர்வேத வைத்திய அதிகாரி) நேற்று (19.06.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - நவமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் யோகேஸ்வரன் (ஓய்வுநிலை ஆசிரியர்) அர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி மற்றும் இராஜராஜேஸ்வரன் (ஓய்வுநிலை மிருகவைத்தியர்), நாகராஜேஸ்வரன் (ஓய்வுநிலை பொறியியலாளர்), நாகராஜேஸ்வரி, தியாகராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரன் (ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், விமலாதேவி, தர்மராஜேஸ்வரன் மற்றும் இராஜேஸ்வரி, சிவயோகராணி, கோணேஸ்வரன் - மனோகராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் இல.29, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.29, குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

தகவல் : குடும்பத்தினர்
021 222 0014, 021 222 8642

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏவுகணைத் தாக்குதல்

இஸ்ரேலின் பங்குச்சந்தைக் கட்டடத்தின் மீது ஈரானால் நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ம)

# ஆஸி. உயர்கல்வியைப் பெற இலங்கை மாணவர்கள் ஆர்வம்

## அவுஸ்திரேலியத் தூதுவர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 20**

**அவுஸ்திரேலியாவில் உயர்கல்வியைப் பெறுவதில் இலங்கை மாணவர்கள் அதிக ஆர்வம்காட்டுகின்றனர். தற்போது சுமார் 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் அவுஸ்திரேலியாவில் கற்றுவருகின்றனர் என இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் போல் ஸ்டீபன் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் உதயன் பணிமனைக்கு வருகை தந்து ஆசிரியபீடத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

எங்கள் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான கல்விக் கூட்டுழைப்பு மிகவும் புலமானது. இப்போது 30க்கும் மேற்பட்ட அவுஸ்திரேலிய கல்வி நிறுவனங்கள் இலங்கை நிறுவனங்களுடன், கூட்டுப் பட்டங்களை வழங்கும் கூட்டுத் திட்டங்களை முன்னெடுத்துவருகின்றன . ஓர் இலங்கை மாணவர் அவுஸ்திரேலியாவில் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தின் முதலாம், இரண்டாம் வருடங்களை இலங்கையில் கற்றுவிட்டு, பின்னர் இறுதிவருடத்தை அவுஸ்திரேலியாவில் கற்றுமுடிக்கலாம். இப்போது சில பல்கலைக்கழகங்களில் அவுஸ்திரேலியா பட்டங்களுக்கான கற்கைநெறிகளை முழுமையாக இலங்கையிலேயே வழங்குகின்றன.

எடித் கோவான் பல்கலைக்கழகம் மற்றும் கர்ட்டின் பல்கலைக்கழகம் போன்றவை இந்த வசதியை வழங்குகின்றன. தற்போது அவுஸ்திரேலியாவில் 19,000க்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் கற்றுவருகின்றனர். இந்த ஆர்வம் தொடரும் என்று எதிர்பார்க்கிறோம் - என்றார். (ச-இ)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பிரதி அதிபர் **திருமதி. கஜலக்ஷ்மி சயந்தரூபன்** அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி. தெய்வநாயகி மகேந்திரராஜா**


அவர்கள் 18.06.2025 அன்று இறைபதம் அடைந்தார். இவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.

(CS 58618) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 03 . 1942



மறைவு 14 . 06 . 2025

### கதிரவேலு குமாரசாமி

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் கொக்குவில், கொழும்பு, நீர்வேலி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு குமாரசாமி 14.06.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். காலஞ்சென்றவர்களான கதிரவேலு - அன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் இராசமலர் (மலர்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, யோகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், நடராசா மற்றும் கமலாதேவி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சுஜித்தா மற்றும் சுரபி, சயந்தன், துர்க்கா, குகதர்சினி (குமுதா), நந்தகோபி (நந்தா) அவர்களின் பாசமிகு தந்தையும் சிவகுமார், சோபா, ரமேஷ், உதயகுமார், சுரேஸ் குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரவீனா, பிரவீமன், பாடினி, ஆருனி, சபிநயா, தனோ, அப்ஷனா, அனிர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரீ கந்தசுவாமி கோவிலடி**
**நீர்வேலி தெற்கு**
**நீர்வேலி**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 205 4847**

(CS 58621) E

## பருத்தித்துறையைக் கட்டமைக்க புதிய தவிசாளருக்கு ஒத்துழைப்பு


### எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

வடமராட்சியின் தலைநகராக பருத்தித்துறையைக் கட்டமைக்க புதிய தவிசாளர் தலைமையிலான சபைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர், பிரதித் தவிசாளர் தெரிவு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வடமராட்சியின் தலைநகரமாக முன்னர் பருத்தித்துறை நகர் இருந்தது. அந்த நிலைமையை மீண்டும் உருவாக்க வேண்டும். அதற்காக புதிய தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தலைமையிலான சபைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-100)

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 06 . 1945



மறைவு 19 . 06 . 2025

### சின்னத்துரை சிவலோகசுந்தரம்

நெல்லியடி யார்வத்தை வதிரி கரவெட்டியை பிறப்பிடமாகவும், மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவலோகசுந்தரம் அவர்கள் நேற்று (19.06.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் . காலஞ்சென்றவர்களான சதாசிவம் - கற்பகம் தம்பதியரின் பாசமிகு மருமகனும். பரமேஸ்வரியின் அன்புக்கணவரும். சாரதாதேவி. இந்திராணி. சாம்பசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும். சிவகௌரி. சிவகுமார் (இலங்கை மின்சார சபை- சுன்னாகம்). திருச்செந்தூரன் (சிரேஸ்ட விரிவுரையாளர் அரசறிவியல் துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். சுதாகரன் (பலநோக்கு கூட்டுறவு சங்கம் பளை). மயூரிகா (குடும்பநல உத்தியோகத்தர்- கரவெட்டி). சிந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச சபை கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். கம்சாயினி. சங்கீத். சஞ்சய். ஹர்ணிகன். அஸ்விகா. அக்ஷயன். அக்ஷனா. றக்சினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில் வடக்கு பெரியானோடை இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி. சிவகுமார் (மகன்) - 0772269891
சி. திருச்செந்தூரன் (மகன்) - 0779496977
[illegible] - 0771486988

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த பொதுத்தேர்தலில் ஐ.ம. சக்திக்கு படுதோல்வி

## சம்பிக்க ரணவக்க ஆருடம்

கொழும்பு, ஜூன் 20
அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தற்போது மொட்டு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் நிலைக்குச் செல்லும். படுதோல்வியடையும் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சஜித்தின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இறுதிப் பயணத்தை நோக்கிச் செல்கிறது. அந்தக் கட்சியில் புதிய தலைவர் உருவானால் மாத்திரமே அந்தக் கட்சி தப்பும் இல்லையேல் நான் சொன்னது நிச்சயம் நடக்கும். ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டபோது அதை ஒரு சிறந்த ஜனநாயகக் கட்சியாகக் கொண்டுசெல்ல வேண்டும் என்றே விரும்பினேன். ஆனால் அது முடியவில்லை. அது எனக்குப் பிரச்சினை இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான் அரசியல் செய்திருக்கிறேன். இப்போதும் செய்கிறேன். எதிர்காலத்தில் எங்களுக்கு நாடாளுமன்றத்துக்கு வெளியே புதியதொரு அரசியல் மாற்றம் கிடைக்கும் - என்றார். (ஏ-75)

## மயங்கிச்...

பட்டு. மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## செம்மணிப் புதைகுழியில்...

இது தொடர்பில் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் லமிக்கு, உமா குமரனால் அனுப்பப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-
இலங்கையின் உள்நாட்டுப்போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரிட்டன் துணைநிற்கும் என்று பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சு அண்மையில் அறிவித்திருந்தது.
இந்த அறிவிப்புக்கும், இதன் பின்னரான நடவடிக்கைகளுக்கும் நான் நன்றியுடையவளாக இருக்கின்றேன்.
இலங்கையின் வட பகுதியில் மூன்று குழந்தைகளின் சிதிலங்களுடன் மனிதப் புதைகுழியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது பேரதிர்ச்சிக்குரிய விடயமாகும்.
2024ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், 'சர்வதேச தராதரங்களின் அடிப்படையில் மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கான வளங்கள் இலங்கையிடம் இல்லை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த விடயத்தில் பிரிட்டன் தனது நேரடித் தலையீட்டைச் செலுத்தவேண்டும்.
போரின்போது காணாமற்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களுக்கான பதிலை வழங்கும் அனைத்து வாய்ப்புகளும் பயன்படுத்தப்படவேண்டும். எனவே, இலங்கை தொடர்பான விடயங்களில் முன்னின்று செயற்படும் தரப்பு என்ற ரீதியில் இந்தக் கடமையை பிரிட்டன் சரியான வகையில் நிறைவேற்ற வேண்டும் - என்றார்.
இதேவேளை, வடமாகாண ஆளுநரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பிலும் கேட்டறிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத்தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
தொடர்பு: 077 334 1281

**வேலையாட்கள் தேவை**
திருநெல்வேலியில் உள்ள பண்ணைக்கு வேலையாட்கள் தேவை
சம்பளம் : ஆண் - 60000 - 70000
பெண் - 45000
தொடர்பு: 077 354 9140
(CS 58816) E

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதல்**

மலர்வு 04 . 09 . 1995



உதிர்வு 21 . 05 . 2025

**அமரர் சந்திரராசா விதுஜாம்பாள்**

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த கடந்த (21.05.2025) புதன் கிழமை அன்று சிவபதமடைந்த.
**அமரர் சந்திரராசா விதுஜாம்பாள்** அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (20.06.2025) வெள்ளிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் காலை 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று, நாளை மறுதினம் 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(CS/3435) D*




**புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கிளைக்குழு தெரிவு தொடர்பான வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் தொடர்பான அறிவித்தல்**

எமது சங்கத்தின் 09.07.2025 வரை வாக்களிக்கத் தகுதியுள்ள வாக்காளர் பட்டியல்கள் இயங்கும் கிளை நிலையங்களிலும் இயக்காத கிளை நிலையங்களிலும் வாக்காளர் பட்டியல் அந்தந்த கிராம சேவகர் அலுவலகத்திலும், கிராமிய வங்கியிலும் 19.06.2025 தொடக்கம் 09.07.2025 வரை காட்சிப்படுத்தி வைக்கப் பட்டுள்ளது.
இப்பட்டியலில் உள்ள பெயர் விபரங்கள் முகவரிகள் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 09.07.2025ம் திகதி பிற்பகல் 3.00மணிக்கு முன்னதாக செயலாளர் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
குறிப்பு :- ஏதேனும் ஆட்சேபனைகள் கிடைக்கப் பெறாதவிடத்து காட்சிப்படுத்தப்பட்ட அடிப்படையில் கிளைக்குழு தெரிவுகள் நடாத்தப்படும். கிளைக்குழு தெரிவு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**தலைவர்**
**புலோலி ப.நோ.கூ.சங்கம்**
**புலோலி கிழக்கு,**
**பருத்தித்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சாவகச்சேரி புவேந்தன் பாலர் பாடசாலை வேடம் தாங்கல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் மாணவர் ஒருவர் செம் மணிப் புதைகுழி எலும்புக் கூடு போன்று வேடமணிந்து 'நீதி வேண்டும்' என சித்தி ரித்தமை பலரது கவனத் தையும் ஈர்த்தது. (ச)



நெடுந்தீவுப் பிரதேச செயல கத்தின் ஏற்பாட்டில் சுற்றுச் சூழலினைப் பாதுகாப்பதன் மூலம் இனநல்லிணக் கத்தை உருவாக்கும் கருத்திட் டத்துக்கு அமைவாக நெடுந் தீவு குழந்தையேசு முன் பள்ளி வளாகம் மற்றும் அதனை அண்டிய பகுதி களில் நேற்று வியாழக்கி ழமை காலை சிரமதானம் செய்யப்பட்டது. (ச-41-9)



கனேடியத் தூதரக அதிகாரிகளுடனான பால்நிலைசார் வன்முறை தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கிளிநொச்சி மாவட்டம் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள், எதிர்காலத்தில் முன்னெ டுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பான கருத்துகளை வழங்கியிருந்தனர். (ச-22,113)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக 'தூய இலங்கை' செயற்றிட்டத்தின்கீழ் வேம்பொடுகேணி கிராம அலு வலர் பிரிவுக்குட்பட்ட இந்திராபுரம் கிராம மக்கள் நேற்று வியாழக்கிழமை சிரமதானப்பணியில் ஈடு பட்டனர். (ச-41-9)

## யாத்திரை அடியவர்களுக்கு சந்தியான் ஆச்சிரமம் உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 20

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டைமா னாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆல யத்திலிருந்து கதிர்காமக் கந்தன் ஆல யம் நோக்கி பாதயாத்திரை 48 நாள்கள் கடந்து தொடர்ச்சியாக இடம்பெற்று வரு கிறது.

இந்நிலையில் யாத்திரைக்குழுவினர் உட் பட 150 பேருக்கு அம்பாறை உகந்தை முருகன் ஆலயத்தில் வைத்து நேற்றுமுன் தினம் புதன்கிழமை அத்தியாவசியமான உலர் உணவுப்பொதிகள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் வழங்கி வைக் கப்பட்டன. அத்துடன் அவர்களுக்குக்குப் புத்து இலட்சம் ரூபா நிதியில் நீர் விநியோகம் மற்றும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையி லான ஆச்சிரம நிர்வாகத்தினர் நேரடியாக முன்னெடுத்தனர். (ச-66)



## ஆசிரிய கலாசாலையில் தந்தையர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 20

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தந்தையர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கலாசாலையின் மண்டபத்தில் இரண்டாம் வருட ஆரம்பக் கல்விநெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌ லீசன் லலீசன் தலைமையில் சிறப்புற நடைபெற் றது. நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரும், கவிஞருமான தர்மினி ரஜீபன் அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றி னார். அதிதிப் பேச்சாளர் கலாசாலையின் முகாமைத் துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். (ச-66)



## சிரமதானமும் விழிப்புணர்வும்

கிளிநொச்சி,ஜூன் 20

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் பாதீனியச் செடியைக் கட்டுப்படுத் தும் நோக்குடன் மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் தொடர்ச்சி யாக சிரமதானம்மூலம் பாதீனியம் கட் டுப்படுத்தும் நடவடிக்கையும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடும் முன் னெடுக்கப்பட்டுவருகின்றன. நேற்றுமுன் தினம் புதன்கிழமை கிருஷ்ணபுரம் விவ சாயப் போதனாசிரியர் பிரி வின் தொண்ட மாநகர் பகுதியில் சிரமதானம் இடம் பெற்றதுடன் மக்களுக்கு விழிப்புணர் வும் வழங்கப்பட்டது. (ச-22,113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண...

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளகூடைப்பந்தாட்டத் திடலில் இன்று நாளை என இரு தினங்களும் நடைபெறவுள்ளன. அணித்தெரிவுக்குப் பரிசீலிக்கப்படுவதற்கு ஆர்வமுள்ள வீரர்களும் வீராங்கனைகளும், பிற்பகல் 3 மணிக்கு குறித்த கூடைந்தாட்டத் திடலுக்கு வருகைதருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-26)

## காரைநகர்...

காரைநகர் பிரதேசசபையின் முதலாவது அமர்வு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.
11 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 2 ஆசனங்களும், தமிழ் மக்கள் கூட்டணிக்கு 2 ஆசனங்களும், சுயேச்சைக் குழுவுக்கு 2 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 2 ஆசனங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 2 ஆசனங்களும், தமிழரசுக் கட்சிக்கு ஓர் ஆசனமும் கிடைத்திருந்தன.
எவருக்கும் பெரும்பான்மை இல்லாத காரணத்தால், காரைநகர் பிரதேசசபையில் ஆட்சியமைப்பது தொடர்பாக தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த்தேசியப் பேரவை மற்றும் சுயேச்சைக்குழு ஆகியவற்றுக்கு இடையில் ஓர் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த கிருஷ்ணன் கோவிந்தராசனின் பெயர் முன்மொழியப்பட்டு அவர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். இதேவேளை உபதவிசாளராக தமிழ் மக்கள் கூட்டணியின் ஆண்டி ஐயா விஜயராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (அ-ம-125)

## வலி.தெற்கு...

பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்துள்ளது.
31 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் தெற்குப் பிரதேசசபையில் தமிழரசுக்கட்சிக்கு 13 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 6 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 6 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 5 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு ஓர் ஆசனமும் கிடைத்திருந்தன.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தியாகராஜா பிரகாஷ், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியப் பேரவை இணைந்த கூட்டணி சார்பில் கருணைநாதன் அபராசுதன் ஆகியோர் முன்மொழியப்பட்டனர். 14:12 என்ற அடிப்படையில் வெளிப்படையான வாக்கெடுப்பு நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. இதில் 14:12 என்ற அடிப்படையில் தியாகராஜா பிரகாஷ் வெற்றி பெற்றார். இதையடுத்து வலிகாமம் தெற்குப் பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்தது. தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நடுநிலைவகித்தனர். (அ-ம-26)

## வலிகாமம்...

தெரிவுசெய்யப்பட்டுள்ளார். வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் முதலாவது அமர்வு சபா மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.
26 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 10 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 6 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 4 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு 2 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 2 ஆசனங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓர் ஆசனமும், சுயேச்சைக் குழுவுக்கு ஓர் ஆசனமும் கிடைத்திருந்தன.
தவிசாளர் தெரிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சண்முகநாதன் ஜெயந்தனும், தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் தர்மலிங்கம் நந்தகுமாரும் முன்னிறுத்தப்பட்டனர். 18:08 என்ற அடிப்படையில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.
வாக்கெடுப்பின்போது தேசிய மக்கள் சக்தி நடுநிலை வகித்ததைத் தொடர்ந்து, சண்முகநாதன் ஜெயந்தன் 15:07 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றார். இதையடுத்து வலிகாமம் மேற்கு பிரதேசசபையில் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்தது.
உபதவிசாளர் தெரிவுக்கு தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் வேலையா சச்சிதானந்தனும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் கந்தையா இலங்கேஸ்வரனும் முன்மொழியப்பட்டனர். கந்தையா இலங்கேஸ்வரன் உபதவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். (அ-ம-125)

## செம்மணிப்...

தொகுதிகள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டிருந்தன. அந்தப் புதைகுழியை, 'மனிதப் புதைகுழி' என்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றமும் அறிவித்துள்ளது. எனினும், புதைகுழிகள் தொடர்பில் வதந்திகள் பரப்பப்படுகின்றன என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நாடாளுமன்றத்தில் வைத்து இரு தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே, செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி இன்று போராட்டம் இடம்பெறவுள்ளது. (அ-ம-125)

## தவறுதலான...

கப்பட்டுள்ளது. வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் தெரிவு நேற்று இடம்பெற்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சண்முகநாதன் ஜெயந்தனும், தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் தர்மலிங்கம் நந்தகுமாரும் தவிசாளர் தெரிவுக்கு முன்னிறுத்தப்பட்டனர்.
இதன்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் குறித்த உறுப்பினர் சண்முகநாதன் ஜெயந்தனுக்கு தனது வாக்கை வழங்கினார். எனினும் சிறிது நேரத்தில் தர்மலிங்கம் நந்தகுமாருக்கு வாக்களிப்பதாக நினைத்து சண்முகநாதன் ஜெயந்தனுக்கு வாக்களித்துவிட்டதாகவும், இந்தத்தவறைத் திருத்துவதற்கு வாய்ப்புத் தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். அவரின் கோரிக்கையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தேவந்தினி பாபு திட்டவட்டமாக மறுத்துள்ளார்.
இதையடுத்து, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிலைப்பாட்டுக்கு மாறாக, வலிகாமம் மேற்கு பிரதேசசபை வாக்களிப்பின்போது செயற்பட்ட உறுப்பினர், கட்சி உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், இந்த விடயம் தொடர்பில் அவரிடம் விளக்கமும் கோரப்பட்டுள்ளது.
குறித்த உறுப்பினருக்கு, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் நா.இரட்ணலிங்கத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வலிகாமம் மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் தெரிவின்போது கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாக நீங்கள் எதிர்த்து வாக்களித்துள்ளீர்கள். ஆகையால் உடனடியாக அமுலுக்கு வரும்படியாக கட்சி உறுப்புரிமையில் இருந்து நீங்கள் இடைநிறுத்தப்படுகின்றீர்கள். தங்களின் நடவடிக்கை தொடர்பில் (கட்சி மாறி வாக்கிட்டமை) விளக்கம் ஏதும் இருப்பின் ஒருவார காலத்துக்குள் எழுத்துமூலம் அறிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள் - என்றுள்ளது. (அ-ம-125)

## வலி.தெற்கு....

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் இன்று நண்பகல் 02.30 மணிக்கு இந்த அமர்வு நடைபெறவுள்ளது.
28 ஆசனங்களைக் கொண்ட வலிகாமம் தெற்கு,மேற்கு பிரதேசசபையில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 8 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 6 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 5 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 4 ஆசனங்களும், தமிழ் மக்கள் கூட்டணிக்கு 2 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு 2 ஆசனங்களும், ஐக்கிய மக்கள் சக்திக்கு ஓர் ஆசனமும் கிடைத்துள்ளன.
தேசிய மக்கள் சக்தி நடுநிலை வகிப்பதற்கும், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஈ.பி.டி.பி. என்பன தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்கவும் வாய்ப்புள்ளது என்பதால் தமிழரசுக் கட்சியின் ஆட்சியே வலிகாமம் தெற்கு,மேற்கு பிரதேசசபையில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-26)

## பரபரப்புக்கு...

கட்சி 2 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. 4 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஓர் ஆசனத்தையும், தமிழ் மக்கள் கூட்டணி 3 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன.
யாழ்ப்பாணத்தில் உள்ள பல சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்கு ஈ.பி.டி.பி.யினர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இதனால் ஊர்காவற்றுறை பிரதேசசபையிலும் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்க ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்கும் பட்சத்தில் தமிழரசுக் கட்சியின் ஆட்சி அமையும். ஆனால், தமிழரசுக் கட்சியையும்விட ஈ.பி.டி.பி.யினருக்கு அதிக ஆசனங்கள் உள்ளதால், ஈ.பி.டி.பி.யினர் ஆட்சிக் கோரிக்கையை முன்வைக்கவும் சாத்தியங்கள் உள்ளன. அவ்வாறு ஈ.பி.டி.பி. ஆட்சியமைக்க உரிமைகோரும் பட்சத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அதற்கு ஆதரவு வழங்குமா இல்லையா என்பது தொடர்பில் உறுதியான தகவல்கள் எவையும் வெளிவரவில்லை. இவ்வாறானபின்னணியில் ஊர்காவற்றுறை பிரதேசசபையின் இன்றைய அமர்வு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.
நல்லூர் பிரதேசசபையில் தமிழ் மக்கள் கூட்டணி ஆட்சியமைக்க தமிழரசு ஆதரவு வழங்கியது. அந்தப் புரிதலின் அடிப்படையில் இந்தச் சபையில் தமிழரசுக் கட்சிக்கு தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவு வழங்கும் என்று கருதப்படுகின்றது. (அ-ம-26)

## நடுநிலை...

சா.செ.ச. இளங்கோவன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
கட்சியால் ஒருவருக்கு அனுப்பப்படும் உத்தியோகபூர்வ கடிதத்தை கட்சியின் பொதுச் செயலாளர் முகநூலில் வெளியிடுவது முறையானதா? இராசேந்திரன் கட்சியில் பல தசாப்தகாலமாக செயற்பட்டுவரும் மூத்த உறுப்பினர். இளவாலை மக்களால் மதிக்கப்பட்டு இருமுறை மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர். வலி. வடக்கு பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளராகவும், தொகுதிக் கிளைச் செயலாளராகவும் மாவை சேனாதிராஜாவின் முன்மொழிவில் தெரிவுசெய்யப்பட்டவர்.
தேர்தலின்போது நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக பொதுச் செயலாளருக்கும், பதில் தலைவருக்கும், இராசேந்திரன் செயலாளராக உள்ள காங்கேசன்துறை தொகுதிக்கிளை எழுத்துமூலம் தெரிவித்தும் இதுவரை பதில் வழங்கப்படவில்லை. பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கவும் ஒருமித்த முடிவெடுக்கவும் சந்திப்புக்குக் கோரியிருந்தபோதும் வாய்ப்பளிக்கப்படவில்லை.
கட்சி என்ன முடிவு எடுத்தது என்றோ, அந்த முடிவுக்கு மத்திய குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதா என்பது தொடர்பாகவும் தெரிவிக்கப்படவில்லை. ஆவணங்கள் இருந்தால் அவற்றையும் வெளிப்படையாகத் தெரிவிப்பது முக்கியமானது. தேர்தல் மோசடி மற்றும் ஊழல், கொலைக் குற்றச்சாட்டுகள் உள்ளோரை விழுமிய அடிப்படையில் ஆதரிக்க மறுப்பது எந்தவிதத்தில் கட்சிக்கு எதிரான நடவடிக்கை என்பதையும் வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும் - என்றுள்ளது. (அ-எ)

## வேலணைப்...

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் இன்று காலை 11.30 மணிக்கு இந்த அமர்வு நடைபெறவுள்ளது.
22 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 8 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 4 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு 3 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 2 ஆசனங்களும், தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, சுயேச்சைக்குழு-1, சுயேச்சைக்குழு-2, சுயேச்சைக்குழு-3 ஆகியவற்றுக்குத் தலா ஓர் ஆசனமும் கிடைத்திருந்தன.
இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஈ.பி.டி.பி.யின் ஆதரவு உள்ள காரணத்தாலும், தேசிய மக்கள் சக்தி நடுநிலை வகித்து வருவதாலும் வேலணை பிரதேசசபையில் இன்று தமிழரசுக் கட்சியின் ஆட்சி அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இதேவேளை தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சனின் வழிகாட்டலில் கோடரி சின்னத்தில் போட்டியிட்ட சிவகாடாச்சம் சிவநேசன் தமிழரசுக் கட்சிக்கே தனது ஆதரவு என்று தெரிவித்துள்ளார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லப்பா சுவாமி மாதாந்தக் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூன் 20

நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அபிஷேகம், திருமுறை, நற்சிந்தனை ஓதலைத்தொடர்ந்து காலை 10.30 மணிக்கு 'நாவலர் நல்லாசி' எனும் தலைப்பில், அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவர் வேதநாயகன் இரகுநாதன் உரையாற்றவுள்ளார். (ச-இ)

# புகைப்பிடித்தல், மது அருந்துதல் இளைஞர்களிடையே உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 20

இலங்கையில் 15 முதல் 21 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 11.6 சதவீதமானோர் புகைபிடிக் கின்றனர் என்றும், 18 சதவீதமானோர் மதுபானம் அருந்துகின்றனர் என்றும் மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேற்கொண்ட ஆய்வில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

11 மாவட்டங்களை உள்ளடக்கி மது மற்றும்போதைப்பொருள் தகவல் மையம் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வு குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஆய்வின் முடிவுகளில், 36.5 வீதம் பேர் புகைபிடிப்பதை நிறுத்தியும், 20.9 வீதம் பேர் அதைப் பற்றிய பழக்கத்தை குறைத்தும், 27.9 வீதம் பேர் மதுபானம் அருந்துவதை முழுமையாகக் கைவிட்டும் உள்ளனர்.

மத்திய வங்கியின் புள்ளிவிவரங்களின்படி, 2023 ஆம் ஆண்டு சிகரட் வரி 20% உயர்த்தப்பட்டதன் விளைவாக அரசுக்கு ரூ.7.7 பில்லியன் வருமானம் அதிகரித்துள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. (ச-இ)


## 160 போதை மாத்திரைகள்: மானிப்பாயில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் மானிப்பாய் சுதுமலைப் பகுதியில், 160 போதை மாத்திரைகளை உடமையில்வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் போதைக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் 24 வயதுடையவர் என்றும் அவருக்கு எதிராக மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-26)


60 ஆவது மணிவிழா வாழ்த்து





Rajah Cream House (Nallur, Jaffna)
&
Rajah Food Kingdom (pvt)LTD Nallur

நிறுவனத்தின் உரிமையாளர்
திரு. லயன் சின்னராஜா சத்தியசீலன் MJF
அவர்களின்
20.06.2025 இன்று 60வது அகவை மணி விழாவினை மாலை 4.30 மணிக்கு ராஜ கணபதி மஹால் நல்லூரில் கொண்டாடும் விழாநாயகனுக்கு என்றென்றும் ராஜ கணபதி, நல்லூர் கந்தன் ஆசி அருளுடன் நூற்றாண்டு காலம் வாழ்க,

வாழ்த்துவோர்.
மனைவி, பிள்ளைகள் &
மருமகன், ஊழியர்கள்.

(CS/3436) D*


## மரண அறிவித்தல்



### திரு. சிவஞானம் பாலேந்திரன்

மானிப்பாய் சங்குவேலியை பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை வசிப்பிடமாகவும், கொண்ட திரு. சிவஞானம் பாலேந்திரன் அவர்கள் (19.06.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவமலரின் அன்பு கணவரும், சுகந்தி (பிரதேச சபை நல்லூர்), ஜெயதீபன் (செலிங்கோ இனசூரன்ஸ்), ஜெயரூபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்ற சண்முகநாகன், பரமேஸ்வரன், ஸ்ரீபதி, இராஜேஸ்வரி, விக்கினேஸ்வரன் தெய்வேந்திரன், ஆகியோரின் அன்பு சகோதரனும், விக்கினேஸ்வரன் (இலங்கை மின்சாரசபை வட்டுக்கோட்டை), பாலமயூரா (யா/இனுவில் இந்துக்கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேந்திரன் (ஜேர்மன்), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன், தயாளன், காலஞ்சென்ற ஜெயமலர், சாந்தினி (கனடா), ஆகியோரின் மைத்துனரும் ஆகாஷ், அபினாஷ், லக்ஷயன், ஆதீஷ், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.06.2025) வெள்ளிக்கிழமை நன்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குளப்பிட்டி வீதி,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்
077 543 8843

(CS/3432) D*

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக்கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றன.

கழகத்தின் தலைவரும் உதவி மாவட்டச் செயலாளருமான உ.தர்சினி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் யாழ்.மாவட்டப் பதில் செயலாளரும் கழகத்தின் போசகருமான ம.பிரதீபன் கலந்துகொண்டார்

இதன்போது தலைவராக புள்ளிவிவரத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ம. வித்தியானந்தநேசன், செயலாளராக மாவட்டப் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கி. தயாபரி, பொருளாளராக உ.சுமன், உப தலைவராக மேலதிக மாவட்டப் பதிவாளர் நி. பிரபாகரன், உதவிச் செயலாளராக க. சுபாகரன், உப பொருளாளராக திருமதி ஜெ. சிவகௌரி, விளையாட்டுச் செயலாளராக எம். நிமலன், நலன்புரிச் செயலாளராக திருமதி வி. சுகுணாளினி, நிர்வாகசபை உறுப்பினர்களாக நா. குகதாசன், திருமதி எஸ். நிர்மலா, திருமதி க. குணதர்சனா, பே. குகனேசர், அ. நிஸ்ரோ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-41-9)


**Room வாடகைக்கு**
நல்லூர் கோவிலுக்கு அருகாமையில் Room வாடகைக்கு உண்டு.
மாணவிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 076 787 0837

**வீடு விற்பனைக்கு**
யாழ் மல்லாகம் பகுதியில் பயன்தரும் மரங்களுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது.
Lkr-13,007,000/=
தொடர்பு: 077 868 8913

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:-
Whatsapp:- 0044 740 537 3526
(CS/58593) J-1

பயிற்சியுடன்
**வேலைவாய்ப்பு**
செய்தியாளர்கள்
REPORTER

துடிப்பும், திறமையும் சமூகப்பற்றும் கொண்டவரா நீங்கள்?
ஆம் எனில் இது உங்களுக்கான சந்தர்ப்பம்!!



விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி
chiefeditor@uthayan.com


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org